மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 161. திரு. ஆர். ஈஸ்வரன். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

161—

ஆதி திராவிடர்களுக்கு வீட்டுமனைப்பட்டா.

*1031 திரு. ஆர். ஈஸ்வரன் :
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தும்போது நில உரிமையாளர்கள் நீதி மன்றம் செல்வதைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்காக நிலத்தை கையகப்படுத்தும்போது நில உரிமையாளர்கள் நீதி மன்றம் செல்வதை அரசு தடை செய்ய இயலாது.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தும்போது அந்த நிலத்தின் உரிமையாளர்கள் கோர்ட்டுக்குச் செல்வதால் பல ஆண்டுகள் கால தாமதமாகின்றது. அதை மாற்றுவதற்கு அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவையிலுள்ள வழக்குகளை அரசுத் தரப்பு வக்கீல் மூலம் விரைவு படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 162. டாக்டர் எஸ். சுந்தரராஜ் - மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்

162—

ஆதிதிராவிடர் குடியிருப்புகளைப் பழுது பார்த்தல்.

*1723 டாக்டர் எஸ் சுந்தரராஜ் :
மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

அரசு கட்டிய ஆதி திராவிடர் குடியிருப்புகளைப் பழுது பார்க்க அரசு நிதியுதவி அளிக்குமா?